இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 10.04.2026

# சிறுபான்மையினரை அச்சுறுத்தும் சட்டம்!

ஏற்கனவே வக்ஃப் சட்டத்திருத்தம் கொண்டு வந்து இசுலாமியர் சொத்துகளை அடித்துப் பறிப்பது போல் இப்போது கிறிஸ்தவர்களின் சொத்துகளைப் பறிக்க, “வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டத் திருத்தச் சட்டம் (FCRA)” என்ற சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வருகிறது.

காஷ்மீர் சிறப்புத் தகுதியைப் பறிப்பது, குடியுரிமைச் சட்டம் கொண்டு வருவது, பொது சிவில் சட்டம் கொண்டு வருவது, வக்ஃப் சொத்துகளைப் பறிப்பது போன்றவைதான் பா.ஜ.க.வுக்கு விருப்பமானவை ஆகும். மற்ற எதைப் பற்றியும் இவ்வளவு ஆர்வமாகச் செய்வது இல்லை.

வெளிநாடு ஒழுங்குமுறை நிதி உதவி திருத்தச் சட்டமானது தொண்டு நிறுவனங்களைக் குறிவைத்து கொண்டு வரப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைக் குறிவைத்து இந்த மசோதா உள்ளது. இதனால் தொண்டு நிறுவனங்களுக்கு வரும் நிதி குறையும். இனி இது போன்ற நிறுவனம் தொடங்குவதும் சிக்கலானது ஆகும்.

**வெளிநாட்டு நிதி உதவி பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக் கண்காணிக்கவும், முறைகேடுகளைத் தடுக்கவும் இதனைக் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர்களது உண்மையான நோக்கம், தொண்டு நிறுவனங்களையே முடக்குவது ஆகும்.**

**அனுமதி பெறாமல் நடத்தினாலோ, அனுமதியைப் புதுப்பிக்கவில்லை என்றாலோ வெளிநாட்டு நிதி உதவி பெறும் கட்டடங்கள் இனி அரசுக்குச் சேரும் என்று இந்தச் சட்டத்தில் சொல்லி இருக்கிறார்கள். தொண்டு நிறுவனங்களின் உரிமம் எந்த நேரத்திலும் ஒன்றிய அரசால் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட முடியும். இதன் மூலம், தொண்டு நிறுவனங்கள் நடத்திவரும் பள்ளி, கல்லூரி, மருத்துவமனை என எதுவாக இருந்தாலும் “உரிமம் இல்லை” எனக் கூறி அதனை அரசே எடுத்து கொள்ள முடியும். இது போன்ற தொண்டு நிறுவனங்களை சிறுபான்மை கிறிஸ்தவர்கள் நடத்தி வருகிறார்கள். அதனால் எப்போது வேண்டுமாலும் அவர்கள் வைத்துள்ள உரிமத்தை ரத்து செய்ய முடியும்.**

மதச்சிறுபான்மை அமைப்புகள், கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிவைத்து மட்டுமே இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. பா.ஜ.க.வின் உண்மையான நோக்கம், இவர்களைக் கட்டுப்படுத்துவதுதான்.

“இந்த நிதியை வைத்து கட்டாய மதமாற்றம் செய்கிறார்கள்” என்ற குற்றச்சாட்டை ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் சொல்லி இருக்கிறார். உள்துறை அமைச்சர் பொத்தாம் பொதுவாகப் பேசக் கூடாது. அப்படி நடந்திருந்தால், அவரது உள்துறையை வைத்து கண்காணித்தாரா? அப்படி எங்கு நடந்துள்ளது, எவ்வளவு நடந்துள்ளது என்று பட்டியலிட்டுச் சொல்லி இருக்கிறாரா என்றால் இல்லை. வாய்க்கு வந்தபடி பா.ஜ.க. பாணி பொய்யை கட்டவிழ்த்து விட்டுள்ளார் ஒன்றிய அமைச்சர்.

இது ஏதோ கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கு எதிரானது மட்டுமல்ல. இது போன்ற வாய்ப்புகளின் காரணமாக உதவிகளைப் பெறும் மக்கள் அனைவருக்கும் இது எதிரானது ஆகும். அனைத்து மக்களுக்கும்தான் இந்த உதவிகள் போய்ச் சேர்கின்றன. எனவே இது அனைத்து மக்களுக்கும் எதிரான சட்டம் ஆகும். “தானும் உதவி செய்ய மாட்டேன், உதவி செய்ய முன்வருபவர்களையும் செய்ய விடமாட்டேன்” என்பது தான் ஒன்றிய அரசின் போக்கு ஆகும்.

“வெளிநாடு ஒழுங்குமுறை நிதி உதவி திருத்தச் சட்டம் ( FCRA)” என்ற மசோதாவை ஒன்றிய அரசு முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

**“ஒன்றிய அரசு தனது விருப்பப்படி, எந்தவொரு முறையான சட்ட நடைமுறையும் இன்றி, ஒரு தேவாலயம், பள்ளி அல்லது மருத்துவமனை போன்ற அமைப்பின் FCRA பதிவை ரத்து செய்யவும் அதன் சொத்துக்களைக் கையகப்படுத்தவும் அதிகாரம் அளிப்பதன் மூலம், இது இந்தியாவின் தொண்டு நிறுவனங்களைச் சிதைக்க முயல்கிறது. இலாப நோக்கற்ற அமைப்புகளால் வழங்கப்படும் கல்வி, மருத்துவம் மற்றும் தொண்டு சேவைகளுக்கு மாற்றாக புதிய சேவைகளை வழங்கும் திறன் ஒன்றிய அரசிடமோ அல்லது மாநிலங்களிடமோ இல்லை. இது ஒரு ‘கொடுங்கோல் மசோதா’ ஆகும்” என்று குறிப்பிட்டுள்ளார் முதலமைச்சர்.**

எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அதற்கு சரியான விளக்கம் அளிக்க முடியாவிட்டால், ‘தேசப் பாதுகாப்புக்கு இது அவசியம்’ என்று சொல்லி திசை திருப்புவார்கள். அதையே தான் இந்தச் சட்டத்திற்கும் சொல்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சியில் தேசம் எந்த வகையில் பாதுகாக்கப்படுகிறது என்பதை இந்திய நாட்டு மக்கள் அறிவார்கள்.

இந்திய எல்லைக்குள் சீனா வந்து குடியேறுகிறது. முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம். நரவனே எழுதிய (இன்னும் முழுமையாக வெளியிடப்படாத) புத்தகத்தின் விவரங்கள் பெரும் விவாதப் பொருளாக உள்ளன. அந்தப் புத்தகத்தில், 2020-ஆம் ஆண்டு கைலாஷ் மலைப் பகுதியில் சீன ராணுவம் இந்திய எல்லைக்குள் ஊடுருவியபோது நிலவிய அசாதாரண சூழல் விவரிக்கப்பட்டுள்ளது. காஷ்மீருக்குள் வந்து பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள். இந்திய மீனவர்கள், சிங்களப் படைகளால் தாக்கப்படுவதைத் தடுக்க எந்த முயற்சியும் இல்லை. இந்தியா மீது இலங்கைக்கு எந்த பயமும் இல்லை. இந்தியாவைச் சுற்றிலும் இதுதான் நிலைமை. தேசப் பாதுகாப்பைப் பற்றி யார் பேசுவது?

எதிர்க்கட்சிகளின் தொடர் எதிர்ப்பு காரணமாக வெளிநாட்டுப் பங்களிப்பு திருத்த மசோதா ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. ஐந்து மாநிலத் தேர்தல் நேரம் என்பதாலும் இதனை ஒத்தி வைத்துள்ளார்கள். இக் கொடூரமான சட்டத்தை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும்.



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை 8.4.2026 அன்று திருவண்ணாமலையில், தென்னிந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் முத்தகரம் பழனிசாமி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தென்பெண்ணை ஆற்றை செய்யாற்றின் வழியே பாலாற்றில் இணைத்து நந்தன் கால்வாய்க்கு பாசன வசதி அளிக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினையும் தெரிவித்தனர்.



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை 8.4.2026 அன்று திருவண்ணாமலையில், ஆரணி கைத்தறி பட்டு பூங்கா சங்கத்தின் தலைவர் சண்முகம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கலைஞர் நூற்றாண்டு கைத்தறி பட்டு பூங்கா அமைத்து ஆரணி பட்டுக்கு தனித்துவமான அடையாளத்தையும் நிரந்தர அங்கீகாரத்தையும் உருவாக்கி, ஆரணி பட்டு நெசவுத் தொழிலை வாழ வைத்தமைக்காக கைத்தறி நெசவாளர்கள், பட்டு முறுக்கேற்றுபவர்கள், பட்டு சாயமிடுபவர்கள் பட்டுச்சேலை வடிமைப்பாளர்கள், பட்டுச்சேலை தயாரிப்பாளர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினையும் தெரிவித்தனர். உடன் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் எ.வ.வேலு, திருவண்ணாமலை வடக்கு கழகச் செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி கழக வேட்பாளர் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி ஆகியோர் உள்ளனர்.

### ஒவ்வொரு முறையும் தமிழ்நாட்டுக்கு வரும் பிரதமர்; தமிழ் தெரியவில்லை என்று வருத்தப்படுகிறார்!

# கற்றுக்கொள்ள மனம் இருந்தால் கற்றுக்கொள்ளலாம்:

## ஜோலார்பேட்டை தொகுதி பரப்புரையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**ஜோலார்பேட்டை,ஏப்.10-**

**திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து, ஜோலார்பேட்டை புதுப்பேட்டை பகுதியில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.**

இதில் அவர் பேசியதாவது:-

நமது திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். உதயசூரியனுக்காக, உச்சி வெயிலிலும் இவ்வளவு பேர் கூடிவருவது, கவிதா தண்டபாணியின் வெற்றிக்கான கூட்டமா கவே நான் பார்க்கிறேன்,” என்றார்.



இந்த தேர்தலில் வெற்றி என்பது உறுதியான ஒன்று. தமிழ்நாட்டு மக்கள் மறுபடியும் திராவிட மாடல் ஆட்சி வர வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய பிறகே உங்களிடம் வாக்கு கேட்க வந்திருக்கிறோம்.

ஆனால், நமக்கு எதிரில் இருக்கும் அதிமுகவினர் வாக்கு கேட்டு தமிழகம் முழுவதும் சுற்றி வருகின்றனர். ஆட்சியில் இல்லாதபோது எடப்பாடி பழனிசாமி, ஐந்து ஆண்டுகள் காணாமல் போய்விடுகிறார்.

எடப்பாடியிலிருந்து சென்னைக்கு வருகிறார்; அதன் பிறகு டெல்லிக்கு சென்று அமித்ஷாவை சந்திக்கிறார். இதையே கடந்த ஐந்து ஆண்டுகளாக செய்து வருகிறார். நம்முடைய முதலமைச்சர் கூறுவது போல், இது தமிழ்நாட்டிற்கு டெல்லிக்குமான தேர்தல்.

மூன்று மொழிக் கொள்கையை பின்பற்றவில்லை என்றால், பள்ளி மாணவர்களின் கல்விக்கான நிதியை ஒதுக்கமாட்டோம் என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள். இதனால், நமது பள்ளி மாணவர்களுக்கான ரூ. 3,458 கோடி நிதி வரவில்லை.

ஒவ்வொரு முறையும் பிரதமர் தமிழ்நாட்டிற்கு வரும்போது, தமிழ் தெரியவில்லை என்று வருத்தப்படுகிறார். நீங்கள் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. கற்றுக்கொள்ளும் எண்ணம் இருந்தால் கற்றுக்கொள்ளலாம்; கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் அதற்கு எங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

நாடாளுமன்றத்தில் ஒரு திட்டத்தின் பெயரைப் படிக்க வேண்டியிருந்தாலும் திணற வேண்டிய நிலை உள்ளது. “மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்” என்று இருந்ததை, இன்று “Mahatma Gandhi National Rural Employment Guarantee Act” என்று இருந்ததை, இப்போது மாற்றியிருக்கிறார்கள். விக்சித் பாரத்—ரோஸ்கர் மற்றும் அஜீவிகா மிஷன். இது யாருக்காவது புரியுதா? இல்லை.

### ‘யோஜனா’ என்றால் என்ன?

வருவாய் வரம்புக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் இலவச உதவித் திட்டத்திற்குப் “பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா” என்று பெயர் வைத்துள்ளனர். “உஜ்வாலா” என்றால் என்ன, “யோஜனா” என்றால் என்ன என்பது பலருக்கும் புரியாது; “பிரதான் மந்திரி” என்பதுதான் புரிகிறது.

திருத்தப்பட்ட தேசிய வேளாண் சாப்பீட்டுத் திட்டம். பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா. தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம். தீன்தயாள் உத்பாத்தியா கிராமின் யோஜன.

திருத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா.

தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்யாய கிராமீன் யோஜனா. இது என்ன என்று கிராமத்தில் இருக்கும் யாருக்காவது புரிந்து, அந்த திட்டத்தை பயன்படுத்த முடியுமா? இல்லை. ரயில்வே ஸ்டேஷன்களில் ஒரு ஊரின் பெயரை எழுதிக் காட்டுவதாக இருக்கட்டும். எல்லாவற்றிலும் ஹிந்தியை திரும்பத் திரும்ப திணித்து கொண்டிருக்கிறவர்கள்,

வட இந்தியாவில் தேர்தல் நடைபெறும் போது, பிரதமர் அங்கு சென்று, அங்குள்ள மக்களிடம் தமிழ்நாட்டில் வட இந்தியாவில் இருந்து வேலைக்காக வரும் மக்களை மோசமாக நடத்துகிறார்கள், தாக்குகிறார்கள் என்று கூறுகிறார்.

ஒடிசாவில் தேர்தல் நடந்தபோது, “தமிழன் ஏன் இங்கே வர வேண்டும்?” என்று பேசுகிறார்கள். ஆனால் இன்று தமிழ்நாட்டுக்கு வந்து, “நான் தமிழ் கற்க வேண்டும், நான் தமிழனாக இருக்க வேண்டும்” என்று கூறுகிறார்கள். தேர்தலுக்கு தேர்தல் தங்களுடைய நிலைப்பாட்டையும், சாயலையும் மாற்றிக் கொண்டிருக்கிறவர்கள்தான் எதிரணியில் இருக்கிறவர்கள்.

போன நாடாளுமன்றத் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி என்ன சொன்னார்? இனிமேல் நான் பாஜகவுடன் கூட்டணி வைக்க மாட்டேன் என்றார். ஆனால் இந்தத் தேர்தலில் அதையே மறந்துவிட்டார். அவர் எதைச் சொன்னாலும் மறந்துவிடுவார்.

2016 தேர்தலில் செல்போன் கொடுக்கிறோம் என்று ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். 27வது வாக்குறுதியாக இலவசமாக கைப்பேசி வழங்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் யாருக்கும் இலவச கைப்பேசி கொடுக்கவில்லை. எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி கொடுத்தால் நிறைவேற்ற மாட்டார். அதிமுகவிற்கும், எடப்பாடி பழனிசாமிக்கு சரியான படத்தை புகட்ட வேண்டும்.

### அ.தி.மு.க. தலைவராக எடப்பாடி நீடிப்பாரா ?

இந்த தேர்தலுக்கு பிறகு அதிமுகவின் தலைவராக நீடிப்பாரா? இல்லை எதாவது மாநிலத்திற்கு ஆளுநராக போவாரா? பாஜகவுடன் கூட்டணி வைத்தால், அந்த கட்சியையே அவர்கள் எடுத்துக்கொள்வார்கள்.

தமிழ்நாட்டை காப்பாற்ற வேண்டும் என்றால் அது தமிழக முதலமைச்சரால் தான் முடியும் எனத் தெரிந்தே ஓபிஎஸ் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்திருக்கிறார் அதேபோல பல்வேறு கட்சிகளில் இருந்தும் ஏராளமான கட்சி நிர்வாகிகள் திமுகவில் சேர்ந்த வண்ணம் இருக்கிறார்கள். பத்து தோல்வி பழனிச்சாமிக்கு இது 11 வது தோல்வியாக இருக்கும்.

இந்த தொகுதியின் எதிர்க்கட்சியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கே சி வீரமணிக்கு எதிராக தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்தவர் மீது தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். தேர்தல் அலுவலகத்தையும் தாக்கியிருக்கக்கூடிய ஒரு குற்றச்செயல் நடந்திருக்கிறது. வேட்புமனு தாக்கல் செய்யும் நிலையிலேயே இவ்வளவு அராஜகம் நடந்தால், இவர்கள் கையில் அதிகாரம் சென்றால் என்ன ஆகும்? தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்ய நினைப்பவர்களுக்கு ஒரு பிடி மண்ணுக்கூட கிடைக்காது.

இந்த தொகுதியில், ஒரு பெண் வேட்பாளராக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நிறுத்தப்பட்டிருக்கிறார். திமுக, இந்த ஐந்து ஆண்டுகள் ஆட்சியே பெண்களுக்கான ஆட்சிதான், சகோதரிகளுக்கான ஆட்சியாகத்தான் பெரிய அளவிலே நடைபெற்றிருக்கு. பெண்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிர் உரிமைத் தொகை தருகிறேன் என்றார்கள்.

இந்தத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பெண் வேட்பாளர் நிறுத்தப்பட்டு ள்ளார்.

திமுக கடந்த ஐந்து ஆண்டுகளாக நடத்திய ஆட்சி, பெண்களுக்கான ஆட்சியாக பெரிய அளவில் செயல்பட்டுள்ளது. பெண்களுக்காக நமது முதலமைச்சர் மகளிர் உரிமைத் தொகையை வழங்குவோம் என்று அறிவித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் ஆயிரம் ரூபாய் கொடுத்தார்.

மகளிர் உரிமைத்தொகை அது ஆட்சிக்கு வந்தவுடன் இரண்டாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். உங்களுக்கு தேவையானதை வாங்கிக் கொள்ளும் உரிமை உங்கள் கைகளில்தான் உள்ளது’ என்று ரூ.8000 மதிப்பிலான கூப்பனை வழங்குவதாக முதலமைச்சர் அறிவித்துள்ளார். தாயுமானவர் திட்டம், வயது முதிந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் இவங்களுக்கெல்லாம் வீடு தேடி கொண்டு வந்து ரேஷன் பொருட்களை தரக்கூடிய திட்டம்.

ஜோலார்பேட்டை தொகுதியில் தி.மு.க அரசு செய்த வளர்ச்சிப் பணிகள்: ரூ.29.65 கோடி மதிப்பில் இரயில்வே கடவு எண். 91 (குடியான்குப்பம்) சாலை மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. ரூ.20.82 கோடி மதிப்பில் கடவு எண்.95 (பச்சூர்) சாலை மேம்பால கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

பச்சூரில் உள்ள புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. 43 கி.மீ. நீளத்திற் கான 13 சாலைப் பணிகள் ரூ.23 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது. அத்தனாவூர் கால்நடை மருந்தகம் கட்டடம் ரூ.54 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் கால்நடை மருத்துவமனைகள் 24 மணி நேரமும் செயல்பட இருக்கிறது, நீர்நிலைகள் தூர்வாரப்படும் உள்ளிட்ட செயல்படுத்தப்பட உள்ளன.

மக்களுடைய கோரிக்கைகளை அவர்கள் கேட்பதற்கு முன்பே நிறைவேற்றுவதற்கே தேர்தல் வாக்குறுதிகள் தயார் செய்யப்பட்டது என்ற அவர், முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்று பேசினார்.